இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கானானியப் பெண் அவர்முன் வந்து பணிந்து, “ஐயா, எனக்கு உதவியருளும்” என்றார். அவர் மறுமொழியாக, “பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார். உடனே அப்பெண், “ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க் குட்டிகள் தின்னுமே” என்றார். இயேசு மறுமொழியாக, “அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

(மத் 15>25-28)

# தன்னார்வலர்களே, உங்கள் நற்பணியின் பயணம் தொடரட்டும்!

## திருத்தந்தை பிரான்சிஸ் வேண்டுகோள்

அன்பு நண்பர்களே, அமைதியாக, எவ்வித சலசலப்பும் இல்லாமல், பெயரையும் புகழையும் தேடாமல் இவ்விளையோர் தின வெற்றிக்காக மாதக்கணக்கில் நீங்கள் உழைத்திருக்கிறீர்கள். இதுவே, இயேசு நம்மோடு வாழ்கிறார், அவர் நம்மைத் தனியே விட்டுவிடவில்லை, அதனால் நாம் ஒருபோதும் அவரை அன்புகூர்வதை நிறுத்தமாட்டோம் என்று ஒன்றிணைந்த மனநிலையில் நம்மைப் பாட வைத்திருக்கின்றது.

எடுத்துக்காட்டாகத் திகழ்கிறீர்கள்

அதுமட்டுமன்று, நீங்கள் அனைவரும் ஒரு குழுவாக இணைந்து உழைத்திருக்கிறீர்கள். அதனால் எல்லோருக்கும் நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறீர்கள். உங்களின் அயராத உழைப்பு உங்களின் நற்பணிகளுக்குச் சான்று பகர்ந்துள்ளது. "இவ்வாறு பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்க வேண்டுமென்று அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டினேன். அதோடு, பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூருங்கள் என்றும் கூறினேன்.” (திப 20:35) என்ற பவுலடியாரின் வார்த்தைகளுக்குச் சான்றாகி நிற்கின்றீர்கள்.

தனது உறவினரான எலிசபெத்தை சந்தித்து வயது முதிர்ந்த அவருக்கு உதவும்பொருட்டு 'மரியா புறப்பட்டு விரைந்து சென்றார்' (லூக் 1:39) என்பதை அவரின் வாழ்வில் காண்கின்றோம். மரியா மட்டுமல்ல, சக்கேயு, பெண்கள் மற்றும் சீடர்கள் அனைவருமே பிறருக்கு உதவிசெய்ய விரைந்து சென்றவர்கள்தாம். எல்லாவற்றிக்கும் மேலாக எருசலேமின் கல்வாரி மலையில் நமதாண்டவர் இயேசுவும் நமக்காகத் தன்னை வழங்கி நாம்



உலக இளையோர் தினப் பிரியாவிடையின் போது.....

மீட்படைய உதவியவர்தான். பிறரை அன்புகூரும் யாரும் வெறுமனே இருக்கமாட்டார்கள், மாறாக, அவர்களுக்கு உதவி செய்ய எழுந்து விரைந்து செல்வார்கள்.

கிறிஸ்துவுடனான சந்திப்பே முக்கியமானது

கிறிஸ்துவை சந்திப்பதே மிக முக்கியமான சந்திப்பு என்பதை நீங்கள் எங்களுக்கு நினைவூட்டி இருக்கின்றீர்கள். ஆம், இதுவே வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்துகிறது. ஒவ்வொரு நாளும் இயேசுவோடு தனிப்பட்ட சந்திப்பை புதுப்பித்தலே கிறிஸ்தவ வாழ்வின் இதயமாகத் திகழ்கின்றது. இயேசுவுக்காகப் பணிபுரிய ‘ஆம்’ என்று சொல்லும்போது அது நம் வாழ்வையே மாற்றுகின்றது. அதையே நாம் பிறரிடத்திலும் கூறும்போது அது மிகுந்த பயனைத் தருகின்றது. நாம் நம் இதயத்தை பெரிதாக விரிவுபடுத்த வேண்டும். அன்பின் பணிகளுக்காக நம் இதயங்களை திறப்பதன் வழியாகத்தான் அவற்றை நாம் விரிவுபடுத்த முடியும். இந்த வழியில் நாம் செயல்படும்போது எல்லாமே நலம் தருவதாக அமையும். நீங்கள் அனைவரும் ஒவ்வொருவரையும் நோக்கி, ‘நான் ஒரு புனிதராக வேண்டும்’ என்று குரலெழுப்பி ஆர்ப்பரித்தீர்கள். நீங்கள் சொல்வது சரிதான், ஏனென்றால் நம் வாழ்வின் இறுதியில் அது மட்டுமே கணக்கிடப்படும், அதுவே நம்மை மகிழ்ச்சியடையச் செய்யும். எனவே, நாம் மீண்டும் ஒருமுறை, ‘நான் புனிதராக விரும்புகின்றேன்’ என்று இப்போது கூறுவோம்.

இந்நாட்களில் நீங்கள் இருவிதமான சந்திப்புக்களை அதாவது, இயேசுவுடனும் பிறருடனும் எதிர்கொண்டதாக இங்கே கூறினீர்கள். இது முக்கியமானது. இயேசுவுடனான சந்திப்பு என்பது ஒரு தனிப்பட்ட மற்றும் தனித்துவமான தருணமாக அமைகிறது. இதனை ஒரு குறிப்பிட்ட நிலை வரை மட்டுமே நம்மால் விவரிக்கப்பட முடியும். ஆனால், இச்சந்திப்பு என்பது எப்போதும் மற்றவர்களுடன் மேற்கொண்ட பயணத்தின் வழியாகவும், மற்றவர்களின் பரிந்துரையின் வழியாகவும் நிகழ்கிறது. எனவே, நீங்கள் கடந்து வந்த பாதையில் தொடர்ந்து செல்லுங்கள். அப்பொழுதுதான், இந்த உலக இளையோர் தினத்தின் தொடர்பயணம் எதிர்வரும் நாள்களிலும் தொடரும். மேலும் இல்லத்திலும், பங்குத்தளத்திலும், பள்ளியிலும் மற்றும் பல்கலைக்கழகத்திலும், மற்றவர்களுடன் குழுவாகப் பயணம் மேற்கொண்டு, எப்போதும் இயேசுவுக்குச் சான்று பகர்ந்திடுங்கள்.

தொடரட்டும் உங்கள் நற்பணியின் பயணம்!

## குளுவாங் பாமோல் தோட்ட புனித அன்னம்மாள் சிற்றாலயத் திருவிழா

ஜொகூர், குளுவாங் பாமோல் தோட்ட, புனித அன்னா (புனித அன்னம்மாள்) சிற்றாலய இறைமக்கள் 39வது ஆண்டு திருவிழாவை வழக்கம்போல் மிகவும் சிறப்பாக கொண்டாடினர்.

கடந்த ஜூலை 20ல் தொடங்கிய புனித அன்னா நவநாள் செபத்துடன், ஒவ்வொரு நாளும் குடும்பம், அருள்பணியாளர், அ.த.ச. பங்கு, பெற்றோர், இளைஞர்கள் போன்று வொவ்வொரு தனி கருப்பொருளில் கொண்டாடப்பட்டது.

கடைசி நாளான ஜூலை 29 ஆம் திகதி, சனிக்கிழமை மாலை 6.30க்கு கொண்டாடப்பட்ட திருவிழா திருப்பலியில், குளுவாங், புனித பிரகாசியார் பங்கின் துணை பங்குத்தந்தை எட்ரியன் அவர்கள் 'எவ்வாறு ஒளியின் மக்களாக நாம் திகழ இயலும்' என்பதை தமது மறையுரையில் எடுத்துரைத்தார்.



சுற்றுவட்டாரத்திலிருந்து சுமார் எண்ணூறு இறைமக்கள் கலந்து கொண்டனர். இவர்களில் பிற சமயத்தவரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விழா ஏற்பாட்டுக் குழு தலவர் சகோதரர் அந்தோனி அவர்கள், சிற்றாலயத்தின் ஆண்டு திருவிழாவின் சிறப்புக்கு நல்லாலோசனைகள் தந்துதவிய பங்குத் தந்தைக்கும், உதவி பங்குத்தந்தைக்கும் திருவழிபாட்டு பணிக் குழுவினருக்கும், மற்றும் அலங்கரிப்பு, விருந்துபசரிப்பு போன்ற பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றிய அனைவருக்கும், நன்கொடையாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விழா திருப்பலிக்குப் பின் மெழுகுவர்த்தி பவனியும் தொடர்ந்து, வழக்கம்போல் விருந்துபசரிப்பும் நடைபெற்றது.

*ஆவி. டேவிட், குளுவாங்.*



# கடவுள் உங்கள் இதயங்களில் விதைப்பதை, சிறந்த கருவூலமாகப் பாதுகாத்திடுங்கள்

## இளையோருக்கு திருத்தந்தை லிஸ்பனில் வலியுறுத்து

அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே! இந்த நாட்களில் நாம் அடிக்கடி கேள்விப்பட்ட ஒரு வார்த்தை நன்றி என்பதுதான். இது பெறுவதை மட்டுமல்ல கொடுப்பதையும் உள்ளடக்கியுள்ளது. இந்த அருள் நிறைந்த நிகழ்வில் நாம் பலவற்றைப் பெற்றுள்ளோம். இப்போது, நாம் இல்லம் திரும்பும்வேளை, கடவுள் நம் இதயங்களில் ஊற்றிய நன்மைக்கு மகிழ்ச்சியாகவும் ஆர்வமாகவும் சான்று பகரவும், பகிர்ந்து கொள்ளவும், கொடுக்கவும் வேண்டியதன் அவசியத்தை இறைவன் நமக்கு உணர்த்துகிறார்.

முதலாவதாக, கர்தினால் Clemente அவர்களுக்கும், அவருடன் இத்தலத் திருஅவை, ஒட்டுமொத்த போர்த்துகீசிய மக்களுக்கும் நன்றிகள். இந்த நாட்களின் நிகழ்வுகளின் போது நம்முடன் உடனிருந்த அரசுத் தலைவரின் ஆதரவிற்காகவும், உதவிக்காகவும் நன்றிகள் மற்றும் நமக்கு உதவிய தேசிய மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கும் ஆயர்கள், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், பெண்கள் மற்றும் பொதுநிலையினருக்கும் நன்றிகள்.

### இறைவன் விதைப்பதைப் பாதுகாத்திடுங்கள்

அன்பான இளையோரே, உங்கள் அனைவருக்கும் அன்பான வாழ்த்துகள்! நீங்கள் எவ்வளவு நல்லவர் என்று கடவுள் உங்களைப் பார்க்கிறார். அவர் உங்கள் இதயங்களில் எதை விதைத்திருக்கிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும். தயவுகூர்ந்து அவைகளைக் சிறந்த கருவூலமாகப் பாதுகாத்திடுங்கள். இந்நாட்களில் நிகழ்ந்த முக்கியமான தருணங்களை மனதில் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சோர்வு மற்றும் ஊக்கமின்மையின் தவிர்க்க முடியாத நேரங்கள் வரும்போது, இந்த நாட்களின் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் அருளையும் மீண்டும் நினைவு கூர்ந்திடுங்கள். நீங்கள் உண்மையில் யார் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். அதாவது, நற்செய்தியின் மகிழ்ச்சியில் நடக்கும் கடவுளின் தூய மக்களினம் என்பதை மறவாதீர்கள்.

### அமைதியான எதிர்காலத்தை உருவாக்குங்கள்

இவ்வேளை, இந்நிகழ்வுகளில் பங்குபெற முடியாத இளையோரு+க்கும், அவர்களின் நாடுகளில் மறைமாவட்டங்கள் மற்றும் ஆயர்பேரவைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தலத்திருஅவைகளின் நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்கும் நான் சிறப்பு வாழ்த்தொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் குறிப்பாக, ஆயுத மோதல்கள் மற்றும் போர்கள் காரணமாக நம்முடன் இருக்க முடியாதவர்களை நம் எண்ணங்கள் மற்றும் செபங்களுடன் இணைத்துக்கொள்வோம். இங்குக் கண்டதை நான் நினைத்துப் பார்க்குக்கும்போது அவர்களைப்போல் இன்னும் பலர் உள்ளனர் என்பதை உணரமுடிகிறது. இத்தருணத்தில்



போரினால் துயருறும் உக்ரைனை நினைத்து நான் மிகவும் மனவேதனை அடைகிறேன். அன்பான இளையோரே, எனக்குள் நான் சுமந்து கொண்டிருக்கும் கனவொன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வயதான நபராக என்னை அனுமதியுங்கள்: இது அமைதிக்கான கனவு, அமைதிக்காக இறைவேண்டல் செய்யும் இளையோரின் கனவு. ஆகவே, அமைதியாக வாழ்ந்து, அமைதியான எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*



**‘படைப்பின் மீது அக்கறை’ உலக இறைவேண்டல் நாள் 1 செப்டம்பர்**

# திருப்பலியில் தெய்வீக தன்மையோடும் மரியாதையோடும் பங்கேற்க சில வழிகாட்டிகள் (பேரருட்தந்தை (Msgr) ஜூட் மிராண்டா)

### 1. பிறரோடு உரையாடுதல்

நீங்கள் பிறரோடு உரையாட விரும்புகிறீர்களா? நல்லது. உங்கள் உரையாடல்களைத் திருப்பலிக்குப் பிறகு வைத்துக்கொள்ளுங்கள். ஆலயத்தில் வேண்டாம். அது அநாகரீகம். உங்கைளச் சுற்றியுள்ளோர் இறைவேண்டலில் ஆழ்ந்திருப்பார்கள்; மௌனமாக ஆண்டவரோடு உரையாடிக் கொண்டிருப்பார்கள். இறைவார்த்தை அறிக்கையிடும் போதும், மறையுரையின் போதும், உங்களுடைய பேச்சினால் அவர்களின் கவனம் சிதறக்கூடும். இதனால், இறைவார்த்தையும் மறையுறையும், மன்றாட்டுகளும் விளங்காமல் போகலாம். எனவே, பிறருக்கு இடையூராக இராதீர்கள்.

### 2. நேரத்தோடு வருதல்

திருப்பலிக்கு தொடங்குவதற்கு சற்று முன்தாகவே வந்துவிடுதல் சிறப்பு. சரியான நேரத்தில் ஆலயத்தில் இருக்க வேண்டும். திருப்பலி தொடங்கியதும், இடையில் வந்து உட்கார இடம் தேடுவதும், உள்ளே நுழைந்து அமருவதும் பிறருக்கு மிகவும் இடையூறாக இருக்கும். இத்தகைய இடையூறை யாரும் விரும்புவில்லை. இதனால், கவனச் சிதறல் ஏற்படும்.

### 3. கட்டாய சூழலில்

ஒருகால் திருப்பலி நேரத்தில் அடுத்திருபவரோடு பேச வேண்டிய கட்டாய சூழல் எழுமேயானால், காதோடு காது வைத்தாற்போல் கிசுகிசுப்பாகப் பேச வேண்டும்.

### 4. ஒழுங்கான ஆடை

ஒழுங்காக உடை அணியுங்கள்: திருவழிபாட்டில் அல்லது திருப்பலியில் ஆடை அணிவது என்பது கடவுளுக்கு மட்டுமல்ல, உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் சரியான மரியாதையைக் காட்டுவதாகும். எப்போதும் அடக்கமான, பண்பாட்டுக்கு ஏற்ற ஆடைகளை அணிய வேண்டும். அறைகுறை ஆடைகள் ஆலயத்திற்கு ஏற்றவை அல்ல. அடுத்தவரை பாவத்தில் விழச் செய்யும்.

### 5 தேவையில்லா நடமாட்டம்.

தேவையில்லாமல் நடமாடாதீர்கள். திருப்பலி கொண்டாட்டத்தின் போது, எல்லா வேளைகளிலும் ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். இதனால் வழிபாட்டில் பங்குபெறுவோருக்கு நிச்சயமாகக் கவனச்சிதறல் ஏற்படும்.

### 6. முறையாக அமர்தல்

ஆலயத்தில் அமர்ந்திருக்கும் போது, உங்கள் கால்களை ஒன்றின் மேல் ஒன்றாகப் போட்டுக்கொண்டு, கலாகளை அசைத்துக்கொண்டு இருக்கக் கூடாது. இருக்கையில் இரு கரங்களை விரித்து வைத்தாற்போலும் அமரக் கூடாது. ஆலயத்தில் அமர்ந்திருக்கும் போது இரு கால்களையும் தரையில் வைக்க வேண்டும். நிற்கும் போது கரங்களை நெஞ்சிக்கு நேராகக் கூப்பிகொள்ள வேண்டும். இது மரியாதை மற்றும் புனிதத்தின் அடையாளமாகும்.

நாம் கொண்டாடும் திருப்பலியானது ஒரு சமூகக் கொண்டாட்டம். ஆதலால், ஒருவரையொருவர் மதித்து, ஆலயத்தில் புனிதத்தன்மையை பேணி காப்போம்.




# இறைவனின் தயவுக்குப் பொறுமை கொள்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 20-ம் வாரம். இயேசு கிறிஸ்து பரிசேயர்கள், சதுசேயர்கள், மறைநூல் அறிஞர்கள், ஆகிய மூன்று தரப்பினர்களை வன்மையாகச் சாடுவார். இந்த மூன்று தரப்பினரும் பொதுமக்களை சுரண்டி, ஏமாற்றிப் பிழைப்பு நடத்தியவர்கள்; அவர்களை வழித் தடுமாறச் செய்தவர்கள். அதனால் இயேசு அவர்களை “வெளிவேடக்காரரர்களே ஐயோ உங்களுக்குக் கேடு” (மத்.23:13-29) என வசைப்பாடுவார். இந்த மூன்று தரப்பினரைத் தவிர வேறு எத்தரப்பினரையும் இயேசு சாடமாட்டார்.

ஆனால் இன்றைய நற்செய்தியில் தமது மகளுக்காக மன்றாடும் ஒரு தாயை நோக்கி இயேசு கூறும் வார்த்தைகள் அநாகரீகமானதாகத் தோன்றலாம். அப்பாவி பெண்ணைப் பார்த்து “நாயே” (மத்.15:26) என்ற வார்த்தையை இயேசு கூறுவது முறையற்றதாகவும் தோன்றுகிறது கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார் (எபே.2:4) எனக்கூறுவதற்கு முறனாகவும் உள்ளது.

அந்த கானானியப் பெண் அவரிடம் வந்து, “ஐயா, தாவிதீன் மகனே, எனக்கு இரங்கும்; என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்” எனக் கதறுகிறாள் (மத்.15:22). பரிசேயர்களையும் சதுசேயர்களையும் மறைநூல் அறிஞர்களையும், வெளிவேடக்கார்களே எனத் திட்டியது போல் அந்தப் பெண்ணையும் பார்த்து இயேசு ஏன் இப்படி கூறினார் என்று நமக்கும் கேட்கத்தோன்றும். இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

இயேசு, அந்நியர் பகுதிகளான தீருக்கும் சீதோனுக்கும் சீடர்களை அழைத்துச் சென்று, அந்த கானானியப் பெண்ணின் அசையா நம்பிக்கை மூலம் சீடர்களுக்குப் பாடம் புகட்டுகிறார். யூத மக்கள் புற இனத்தாரை ‘நாய்’ எனக் குறிப்பிடுவார்கள் (மத்.7:6). அந்நியர்கள் எல்லாம் இழிவானவர்கள், தகுதியற்றவர்கள், தீண்டதகாதவர்கள் என எண்ணங் கொண்ட சீடர்களின் (யூதர்களின்) சிந்தனையை மாற்றவே இந்த காட்சியை இயேசு அரங்கேற்றுகிறார். உண்மையில் எது புனிதம்? என்பதை அந்தக் கானானியப் பெண் வழி இயேசு எடுத்துரைக்கிறார். பொருளற்ற மரபும் பாரம்பரியமும் கடவுள் முன்னிலையில் தகுதியற்றவை, புறந்தள்ளப்பட வேண்டியவை.

தாழ்ச்சியும் அசையா நம்பிக்கையும் இருந்தால் கடவுளின் இரக்கத்தைப் பெறுவோம் என இரண்டாம் வாசகம் (உரோ.11:30) கூறுகிறது. பிற இன மக்கள் உட்பட உடன்படிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும் எவரும் ஆண்டவரின் திருமலைக்கு (விண்ணகம்) அழைத்துச் செல்லப்படுவர் என முதலாம் வாசகம் (எசா.56:7) நம்பிக்கை அளிக்கிறது. தொடக்கத்தில் எதிர்ப்பையும் இகத்தாளத்தையும் கண்டு துவண்டு விடாமல், நம்பிக்கையில் விடாப்பிடியாய் இருந்த அந்தக் கானாணியப் பெண்ணைப் போல், நாம் செய்யும் நற்பணியில் இடர்களைச் சந்தித்தாலும் நேர்கொண்ட பாதையில் நேர்மையைக் கடைப்பிடிப்போம் (எசா.56:1). ‘ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்’ என, உண்மைக் கடவுளுக்கும் பிற தெய்வங்களுக்கும் பலி செலுத்தி வழிபாடு நடத்துவர்களும், ‘எல்லா மதமும் சம்மதம்’ என்ற எண்ணம் கொண்டவர்களும் நம் மத்தியில் இருக்கின்றனர். அவர்கள், கானானியப் பெண்ணைக் கண்டு மனம் மாறி, ஒரே இறைக்கொள்கையில் மனவுறுதி பெற வேண்டும். ஒருவரே ஆண்டவர், அவரே நம் மீட்பர் என்ற எண்ணம் மேலிடவேண்டும்.

*அந்தோணி இன்னாசி*
*ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்*

**ஆண்டின் பொதுக்காலம் 20ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா 56: 1, 6-7 |
| திபா | 67: 1-2. 4. 5,7 2 |
| 2-ம் வாசகம் | உரோ 11: 13-15, 29-32 |
| நற்செய்தி | மத் 15: 21-28 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**